அ.செ.எண். 1076 நாள்: 06.12.2010




# கோ-ஆப்டெக்ஸின் குட்டீஸ் கலெக்‌ஷன்கள் மற்றும் விழாக்கால பரிசு துணி இரகங்கள் விற்பனைத் துவக்க விழா

## பத்திரிக்கை குறிப்பு

கோ–ஆப்டெக்ஸ் என்று அனைவராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் கடந்த 75 ஆண்டு கால சேவையில், தமிழ் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் வாழ்வு மேம்பட பல்வேறு முயற்சிகள் எடுத்ததன் காரணமாக தமிழ் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் சிறப்பான நிலையினை அடைந்துள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கும் சிறந்த சேவை புரிந்து வருகிறது.

சேலை, வேட்டிகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், துண்டுகள், கைலிகள் போன்ற துணி இரகங்கள் தான் கோ–ஆப்டெக்ஸில் கிடைக்கும் என்ற நிலையிலிருந்து, வேகமாக மாறிவரும் நாகரீகத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் புதுப்புது வடிவமைப்புகளில் வாடிக்கையாளர்களை கவரும் வகையில் துணி இரகங்களை அறிமுகம் செய்வதன் மூலமாக தொடர்ந்து

வாடிக்கையாளர்கள் பேராதரவினைப் பெற்று தனிச்சிறப்பு மிக்க நிறுவனமாக கோ–ஆப்டெக்ஸ் விளங்கி வருகிறது. இத்தகைய திட்டமிட்ட செயல்பாட்டின் காரணமாக இந்தியாவிலுள்ள கைத்தறி நிறுவனங்களிலேயே முதன்மை நிறுவனமாக கோ–ஆப்டெக்ஸ் திகழ்கிறது.

வேகமாக மாறிவரும் நாகரீகத்திற்கு ஏற்ற வகையில் புத்தம் புதிய வடிவமைப்புகளில் மக்களின் மனதைக் கவரும் துணி இரகங்களை உற்பத்தி செய்து, இத் துணி இரகங்களை தமிழகத்தில் உள்ள 131 விற்பனை நிலையங்கள் மற்றும் இதர மாநிலங்களில் இயங்கிவரும் 69 விற்பனை நிலையங்கள் ஆக மொத்தமாக 200 விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்து கைத்தறி நெசவாளர்களுக்கு கோ–ஆப்டெக்ஸ் நற்பணி ஆற்றி வருகிறது.

வாடிக்கையாளர்களின் பேராதரவுடன் செயல்பட்டு வரும் கோ–ஆப்டெக்ஸ் கடந்த தீபாவளி 2010 பண்டிகை விற்பனைக் குறியீடான ரூ.85.00 கோடியினை மிஞ்சி, மொத்தம் ரூ.88.00 கோடிக்கு விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. எதிர்வரும் பொங்கல் 2011 பண்டிகைக்கு சில்லறை விற்பனை குறியீடாக ரூ.60.00 கோடி விற்பனை இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு அதனை எய்துவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சமீப காலமாக ஆயத்த ஆடைகள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள் வாடிக்கையாளர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. வாடிக்கையாளர்களின் இத்தகைய துணி இரகங்களின் தேவையினைப்

2/5

பூர்த்தி செய்யும் வகையில், கோ–ஆப்டெக்ஸ் கண்கவரும் வண்ணங்களில் அழகிய வடிவமைப்புகளில் முழுவதும் இயற்கை இழைப் பருத்தி நூல் (Organic Cotton Yarn) மற்றும் இயற்கை சாயக் கலவையினைக் (Natural Dyes) கொண்டு தயார் செய்யப்பட்ட பிறந்த குழந்தை முதல் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான ஆடைகள் மற்றும் விழாக்காலங்களில் பரிசாக வழங்குவதற்கு ஏற்றவாறு உபயோகமிக்க, அழகிய வடிவமைப்புகளில் உற்பத்தி செய்யப்பட்டு பேக்கிங் செய்யப்பட்ட துணி இரகங்களான படுக்கை விரிப்புகள், துண்டு இரகங்கள், மேஜை விரிப்புகள், பிளேஸ் மேட்ஸ், சமையலறை உபயோகிப்பு துணி இரகங்கள் மற்றும் ஆடவருக்கான பருத்தி இரக சட்டைகள் போன்ற இரகங்கள் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இந்த புத்தம் புது கண்ணைக் கவரும் வண்ணங்களிலான துணி இரகங்களின் அறிமுக விழாவும் அதன் விற்பனையும் தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு **கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்** அவர்களால் சென்னை, எழும்பூர், பாந்தியன் சாலையில் இயங்கிவரும் கோ–ஆப்டெக்ஸ் தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகையில் 06.12.2010 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இவ்விழாவிற்கு கைத்தறித் துறையின் அரசு முதன்மைச் செயலர் திரு **ஆர். ராஜகோபால்,** இ.ஆ.ப. அவர்கள் தலைமை வகித்தார்கள். கைத்தறித் துறை இயக்குநர் திரு **வெ.சந்திரசேகரன்,** இ.ஆ.ப. அவர்கள் முன்னிலை வகித்தார்கள். விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் முனைவர் **சாந்தினி கபூர்,** இ.ஆ.ப. அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்கள்.

*****

3/5

# அறிமுகப்படுத்தப்படும் இரகங்கள் பற்றிய குறிப்பு

## குழைந்தைகளுக்கான ஆயத்த ஆடைகள்

- குழைந்தைகளுக்கான துணி இரகங்கள் முதன் முதலாக கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்படுகிறது.

- குழைந்தைகளின் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு இத் துணி வகைகள் முழுவதும் இயற்கை இழைப் பருத்தி நூல் (Organic Cotton Yarn) மற்றும் இயற்கை சாயக் கலவையினை (Natural Dyes) உபயோகப்படுத்தி தயார் செய்யப்பட்டதாகும்.

- குழந்தைகளின் மென்மையான உடலுக்கு இதமளிக்கும் வகையான ஆடைகள் காற்றோட்ட வசதியுடன் எளிதாக அணிவிப்பதற்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

- இந்த இரகங்கள் கண்ணைக் கவரும் வகையில் பல்வேறு வண்ணங்களில் பிறந்த குழந்தை முதல் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது.

- குழைந்தைகளின் ஆயத்த ஆடைகள் ரூ.200 முதல் ரூ.450 வரையிலான விலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

## விழாக்கால பரிசுத்துணி இரகங்கள்

- கிருஸ்துமஸ் பண்டிகை மற்றும் தமிழர் திருநாள் பண்டிகைக் காலங்களில் உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு கைத்தறித் துணி இரகங்களான படுக்கை விரிப்புகள், துண்டு இரகங்கள், மேஜை விரிப்புகள், பிளேஸ் மேட்ஸ், சமையறை உபயோகிப்பு துணி இரகங்களை பரிசாக ( Festival Gifts ) வழங்குவதற்கு ஏற்ற வகையில் அழகாக பேக்கிங் செய்யப்பட்டு விற்பனைக்கு வைக்கப் பட்டுள்ளது.

- ஏற்றுமதிக்கான தரத்துடன் இந்த துணி இரகங்கள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன.

- நடுத்தர மக்களும் வாங்கிப் பயன்பெறும் வகையில், ஒவ்வொரு பரிசு பேங்கிங்கும் ரூ.175 முதல் ரூ.650 வரை விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

- ஆடவருக்குத் தேவையான அழகிய வடிவமைப்புகளுடன் கூடிய நேர்த்தி மிகு பருத்தி இரக சட்டைகள் ஒவ்வொன்றும் ரூ.300 முதல் 350 வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9